DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 121/2020

List of Witness : Lw2

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 09/09/2024

(எதிரி ஆஜர்)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பழைய கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் சம்பவத்திற்கு பிறகு வேலை எதுவும் செல்ல இயலவில்லை என்பதால் வீட்டில் தான் இருக்கிறேன். மேற்படி சாட்சி இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க சக்கர நாற்காலியில் வந்துள்ளார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பழனிச்சாமி ஆவார். 2018 ம் வருடம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. சம்பவத்திற்கு பிறகு எனக்கு ஞாபக சக்தி கொஞ்சம் குறைவாக உள்ளது. தெரிந்தவரை சொல்கிறேன். தர்மராஜ்,கனகராஜ், பாண்டி ஆகியோர்களுடன் ஆஜர் எதிரி பழனிச்சாமி தோட்டத்திற்கு கிணற்று வேலைக்காக சென்றிருந்தேன். நான் கிணற்றுக்குள் இறங்கி வேலை செய்துக்கொண்டிருந்த போது சட்டு மண் இடிந்து என் மீது விழுந்ததில் எனக்கு மண்டையில் அடி, முதுகு தண்டில் அடி, இடுப்பில் அடி, காலில் அடி ஏற்பட்டது. சுயநினைவின்றி சென்றுவிட்டேன். என்னை கிரேனில் வைத்து மேலே தூக்கி ஒரு காரில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு வேலம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கும் நான் சுயநினைவின்றி தான் இருந்தேன். பின்பு எனது வீட்டுக்காரம்மா மகுடீஸ்வரி தான் என்னை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற விவரங்கள் குறித்து சொன்னார். பின்பு திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். நான் தற்போது வரை நிற்கவோ, உட்காரவோ, நடக்கவோ கூட முடியாமல் படுத்தப்படுக்கையாகத்தான் உள்ளேன். தற்போதும் என்னால் உட்கார கூட இயலவில்லை. வேறு வழியில் இல்லாமல் தான் வலியுடன் உட்கார்ந்து உள்ளேன்.

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

போலீசார் என்னை விசாரித்த போது என்னால் எந்தவிவரங்களும் சொல்ல முடியவில்லை. கிணற்று வேலை தர்மராஜ் கான்ட்ராக்ட் எடுத்து இருந்தார். சம்பவத்து முன்பே 10, 15 நாட்கள் வேலை செய்தோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆஜர் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. அவர் இருந்தார். கான்ட்ராக்ட் தான் இருந்தார் என்றால் சரிதான். பழனிச்சாமி தான் வேலைக்கு அழைத்தார். எனக்கு சம்பளம் தருபவர் தர்மராஜ் என்றால் சரிதான். அவர் குப்பிடும் அன்றைக்கு வேலைக்கு செல்வோம் என்றால் சரிதான். கிணறு பழனிச்சாமிக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. பழனிச்சாமி என்னை வேலைக்கு கூப்பிடவில்லை என்றால் சரியல்ல. விபத்து கான்ட்ராக்டர் தர்மராஜ் என்பவரது கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றாலும் எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. கிணற்றை வெட்டிக்கொடுக்கும் முழு பொறுப்பும் தர்மராஜுக்கு சார்ந்தது என்றால் சரிதான். விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. கிணற்றை வெட்டிக்கொடுக்கும் பொறுப்பை பழனிச்சாமி கான்ட்ராக்டர் தர்மராஜுக்கு கொடுத்துவிட்டதால் தர்மராஜ் தான் அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு பொறுப்பு ஆவார் என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.09 17:18:46 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 09/09/2024